DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,

RAMANATHAPURAM

**C.C.No. 95/2017**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW4 | Caste | : | |
| Name | : | தங்கராஜ் | Age | : | 37 |
| F/N | : | அய்யந்துரை | Occupation | : | பொக்லைன் ஆப்பரேட்டர் |
| Village | : | கம்மம்பட்டி | | | |
| District | : | தர்மபுரி | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 13th day of March 2025.

**13.03.2025**

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை**

நான் தர்மபுரி மாவட்டம் கம்மம்பட்டி கிராமத்தில் குடியிருந்து கொண்டு பொக்லைன் ஆப்பரேட்டராக தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 2014 ம் வருடம் நான் அ.சா.1 னிடம் பொக்லைன் ஆப்பரேட்டராக இராமநாதபுரம் மாவட்டம் கமுதியில் வேலை பார்த்தேன். அ.சா.1 அவரது பொக்லைன் வாகனத்தை மாதம் ரூ. 1,65,000/- வாடகைக்கு ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஆஜர் எதிரியிடம் கொடுத்தார். அதன்படி கடந்த 2014 ம் ஆண்டு 8 வது மாதத்திலிருந்து 11 வது மாதம் வரை ஆஜர் எதிரியின் நிலத்தில் அ.சா.1 ன் பொக்லைன் வாகனத்தை நான் ஓட்டினேன். அ.சா.1 ன் மற்றொரு வாகனத்தை இன்னொரு நபர் ஆஜர் எதிரியின் நிலத்தில் ஓட்டினார். ஆஜர் எதிரி அ.சா.1 க்கு தரவேண்டிய பணத்தை தரவில்லை. அதனால் அ.சா.1 எங்களுக்கு தரவேண்டிய சம்பள தொகையை தரவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 03.09.2014 ம் தேதியிலிருந்து தான் நான் அ.சா.1 னிடம் பணி செய்து வருகிறேன் என்றால் அதற்கு முன்பிலிருந்தே பணி செய்து வருகிறேன். என்னிடம் ஆப்பரேட்டராக தொழில் செய்வதற்கு உரிமம் இல்லை. ஆனால் அனுபவ சான்றிதழ் உள்ளது. நான் பொக்லைன் ஆப்பரேட்டர் இல்லை என்றால் சரியல்ல. பொக்லைன் வாகனத்திற்கு ஆஜர் எதிரி தான் டீசல் போடுவார். எனக்கு அ.சா. 1 தான் சம்பளம் கொடுப்பார். சாட்சிகள் கார்த்திக், மாரிமுத்து மற்றும் நான் ஆகிய மூவரும் அ.சா.1 னிடம் தான் வேலை பார்த்தோம் என்றால் சரிதான். பொக்லைன் வாகனம் எங்களின் கட்டுப்பாட்டில் தான் இருந்தது என்றால் சரிதான். அ.சா.1 வாகனத்தை பார்ப்பதற்கு வருவாரா என்றால் வருவார். அ.சா.1 மணல் குவாரிக்கு வந்துவிட்டு அங்கிருந்து சென்றுவிடுவார் என்றால் சரிதான். போலீசார் என்னிடம் டீசல் போட்ட ரசீதுகளை கேட்டார்களா என்றால்

இல்லை. உண்மையில் நான் சொன்னது போல் பொக்லைன் வாகனம் ஆஜர் எதிரியின் நிலத்தில் செயல்பட்டிருந்தால் டீசல் போட்ட ரசீதுகளை போலீசாரிடம் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை கமுதி காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். நான் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், அ.சா.1 எனது உரிமையாளர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை**

PRABHAKARAN G

Digitally signed by PRABHAKARAN G
Date: 2025.03.13 13:01:19 +0530

**நீதித்துறை நடுவர் எண். 2**
**இராமநாதபுரம்**

DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,

RAMANATHAPURAM

**C.C.No. 95/2017**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW5 | Caste | : | |
| Name | : | ரவீந்திரன் | Age | : | 59 |
| F/N | : | வேலுச்சாமி | Occupation | : | சார்பு ஆய்வாளர், மாவட்ட குற்றப்பிரிவு |
| Village | : | | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 13th day of March 2025.

**13.03.2025**

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் குற்றபிரிவில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.07.2015ம் தேதி இராமநாதபுரம் மாவட்ட குற்றப்பிரிவில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது இராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் நடப்பு தாள் எண். SB/16696/934/RMD/2015 நாள் 13.06.2015ன் படி உள்ள மனுதாரர் பாலசுப்பிரமணியன் த/பெ. சின்னசாமி, கொம்பூதி என்பவரின் புகார் மனுவை பார்வையிட்டு இராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவுப்படியும் மாவட்ட குற்றப்பிரிவு காவல் ஆய்வாளரின் அறிவுரையின்படியும் நிலைய குற்ற எண். 37/2015 சட்டப்பிரிவுகள் 406, 420 இதச வாக வழக்குப்பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசலையும், வாதியின் புகார்மனுவின் அசலையும், இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட ஒப்பந்த நகலையும் சமூக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்பு வழக்கு கோப்பை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளரின் பார்வைக்கு சமர்ப்பித்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** முதல் தகவல் அறிக்கையில் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனங்களின் பதிவெண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.1 தான் வாகனங்களின் உரிமையாளர் என்பதை காட்டும் ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் எந்த இடத்தில் மணல் குவாரி இருந்தது என்பதை பற்றிய விவரம் இல்லை என்றால் புகார் மனுவில் குறிப்பிடவில்லை அதனால் முதல் தகவல்

அறிக்கையில் குறிப்பிடவில்லை. கமுதி காவல்நிலைய போலீசாரை இதற்கு முன் அ.சா.1 கொடுத்த புகார்மனு சம்மந்தமாக விசாரித்தேனா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கையில் ஒப்பந்தமானது 03.09.2014 ம் தேதி போடப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி அ.சா.1 ற்கு 6,90,000/-ம் கொடுக்க வேண்டும் என்று தான் முதல் தகவல் அறிக்கையில் உள்ளது என்றால் சரிதான்.

2. ஒப்பந்தபத்திரத்தின் அடிப்படையில் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கையில் நான் விசாரணை செய்ததில் குற்றம் நிகழ்ந்தது தெரிய வந்துள்ளது என்ற குறிப்பு இல்லை என்றால் சரிதான். புகார்மனுவில் பணத்தை பெற்று தரும்படி தான் கோரப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், அ.சா.1 எதிரியிடமிருந்து பணம் பறிப்பதற்காக புகார்மனு கொடுத்துள்ளார் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையை நான் பதிவு செய்ததால் அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை – இல்லை</u>**

PRABHAKARAN G

Digitally signed by PRABHAKARAN G
Date: 2025.03.13 13:01:26 +0530

**நீதித்துறை நடுவர் எண். 2**
**இராமநாதபுரம்**